<u>**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.**</u>

<u>**C.C.No.128 /2019**</u>

2025 ம் ஆண்டு ஜூலை மாதம் 03 ஆம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி–01 , திரு.ரகுபதி என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 56 வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கோவிந்தராஜ், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ரகுபதி | வயது | : | |
| த.பெ/ க.பெ. | : | பாலுச்சாமி | தொழில் | : | |
| ஊர் | : | | நிலை | : | LW01 / PW01 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**( எதிரி ஆஜர் இல்லை. அவர் தரப்பு வழக்கறிஞரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது )**

**முதல் விசாரணை:**

1) நான் சூரியமணலில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். 28.03.2019 ம் தேதியன்று சுமார் இரவு 09.20 மணியளவில், எனது அப்பா தெருவீட்டிலிருந்து ரோட்டில் இருக்கும் எனது பாட்டி வீட்டிற்கு சைக்கிளில் சென்றார். ஜெயங்கொண்டத்திலிருந்து திருச்சி செல்லும் சாலையில் கிழக்கிலிருந்து மேற்காக சென்றார், அதே திசையில் எனது அப்பாவிற்கு பின்னால் Honda Unicorn என்ற இருசக்கர வாகனத்தில் வந்த மணிமாறன் என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஹாரன் அடிக்காமலும் வந்து, எனது அப்பா சென்ற சைக்கிளில் மோதிவிட்டார். அதில் எனது அப்பாவிற்கு காதுகளில் இருந்து இரத்தம் வந்தது. கால்கள், நெஞ்சு ஆகிய இடங்களில் அடிபட்டது. இதுகுறித்து எனது சித்தப்பா செல்வம் வெளியூர் செல்வதாக இருந்தார். அப்போது இந்த விபத்தை பார்த்துவிட்டு எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார்.

2) அதன்பின்புநான், எனது அண்ணன் ஐயப்பனும் சம்பவ இடத்திற்கு வந்தோம். இருசக்கர வாகனம் ஓட்டி வந்த அந்த பையனுக்கும் குறைவாக அடிபட்டிருந்தது. 108 ஆம்புலன்சில் எனது அப்பாவையும், அந்த நபரையும் அழைத்துக்கொண்டு ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். எனது அப்பாவை மேல்சிகிச்சைக்காக தஞ்சை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும்படி கூறினார்கள். அங்கு

சிகிச்சை பலனின்றி 29.03.2019ம் தேதியன்று அதிகாலை 01.00 மணியளவில் எனது அப்பா இறந்துவிட்டார்.
3) சம்பவம் நடந்த மறுநாள் விடியற்காலை 05.00 மணிக்கு நான் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். எனது புகாரை அப்போது அவர்கள் ஏற்கவில்லை. அதனால் 29.03.2019ம் தேதி புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். **(புகார் அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. சம்பவ இடத்திற்கு எனது சித்தப்பா தகவல் கொடுத்துத்தான் சென்றேன். எனது போலீசார்விசாரணையில் சித்தப்பா போன் மூலமாக தகவல் கொடுத்தார் என்று கூறியுள்ளேனா என்றால் என்னை போலீசார் கேட்கவில்லை. நான் கூறவில்லை. நான் எனது அப்பாவுடன் தஞ்சாவூர் மருத்துவமனைக்கு செல்லவில்லை.
2) எனது அப்பா இறந்தபின்புதான் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தபோது புகார் அளிக்க சென்றேன். அவர்கள் ஏற்கவில்லை. புகாரை அப்போது அவர்கள் ஏற்கவில்லை என்பதை குறித்து நான் மேலதிகாரியிடம் மேல்முறையீடு செய்யவில்லை. புகாரில் உள்ள சங்கதிகளை எனது சித்தப்பா கூறினார். நான் கொடுத்தேன். பதட்டத்தில் எழுத வராத காரணத்தினால் எனது சித்தப்பா சொல்லி, ஒரு வழக்கறிஞர்தான் எழுதினார். மருத்துவமனையில் வைத்து புகாரை எழுதினோம். நேரம் சரியாக எனக்கு நினைவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.
3) எனது போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பொறுத்து எதுவும் சொல்லப்படவில்லை. எனது வாக்குமூலத்தில் உள்ளபடி உறவினர்களின் பெயர், விலாசம் குறிதது சொல்லவில்லை.
4) கண்ணுற்ற சாட்சி திருநாவுக்கரசு யார் என்றே எனக்கு தெரியாது. ஜெயங்கொண்டத்திலிருந்து திருச்சி செல்லும் தார் சாலையில் வடக்கு புறம் சூரியமணல்கிராமத்தில் தெருவில் எனது வீடு உள்ளது. தெற்கிலிருந்து மேற்கு புறமாக செல்லும் எனது ஊர் பாதையில் முனையில் ஒரு பாலம் உள்ளதா என்றால் ரோட்டில் உள்ளது. அது கிழக்க மேற்காக உள்ளது. அந்த பாலத்திற்கு ஒரு வடபுறத்தில் ஒரு புங்கமரம் உள்ளது என்றால் சரிதான். புங்கமரத்திற்கு வடபுறம் இ.பி. போஸ்ட் உள்ளது என்றால் அது சமீபத்தில் போடப்பட்டது. சம்பவம் நடக்கும்போது இல்லை.
5) சம்பவம் நடைபெறும் சமயத்தில் மின்விளக்கு இல்லை.அதன்

தென்புறத்தில் சிறியதாக ஒத்தையடி பாதை செல்கிறது. எனது தெருவிலிருந்து மெயின்ரோட்டிற்கு வந்து திரும்பினால் 100 அடி தொலைவில் எனது பாட்டி வீடு உள்ளதா என்றால் அடி குறித்து எனக்கு தெரியாது, ஆனால் பக்கத்தில் உள்ளது.

6) தெருவில் இருந்து மெயின்ரோட்டிற்கு வந்தால் இரண்டிலிருந்து மூன்று நிமிடத்திற்குள் பாட்டி வீட்டிற்கு செல்லலாமா என்றால் ஐந்து நிமிடங்கள் ஆகும். இந்த வழக்கு குறித்து போலீசார் யாரையெல்லாம் விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

7) இந்த சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது போலீசார் விசாரணையில் எதிரி மணிமாறன் சம்பவ இடத்தில் இருந்தார் என கூறியுள்ளேனா என்றால் அரசு மருத்துவமனையில் விசாரிக்கும்போது கூறியுள்ளேன். எனது வாக்குமூலத்தில் அதுகுறித்த சங்கதிகள் இருந்ததா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

8)மேலூர் கணேசன், சங்கர், மோகன், ஆதிமூலம், திருஞானம் ஆகியோரை எனக்கு தெரியும். எனது அப்பா விபத்திற்காக நஷ்டஈடு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. எதிரியால் எனது அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டு,அவர் இறக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஓம்/—S.தனலெட்சுமி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1 (மு.கூ.பொ),
ஜெயங்கொண்டம்.